# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(03.12.2022 முதல் 07.12.2022)

அறிக்கை எண்: 96/2022 தேதி: 02.12.2022

### நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 30 - 31 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 22 - 25 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (03.12.2022 முதல் 07.12.2022)

| கடந்த வார வானிலை (29.11.2022 முதல் 01.12.2022) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (03.12.2022 முதல் 07.12.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 29/11 | நாள்-2 30/11 | நாள்-3 01/12 | தேதி | நாள்-1 03/12 | நாள்-2 04/12 | நாள்-3 05/12 | நாள்-4 06/12 | நாள்-5 07/12 |
| 0 | 0 | 18.5 | மழை (மி.மீ.) | 6 | 10 | 6 | 3 | 10 |
| 31 | 30 | 30 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 31 | 30 | 30 | 29 | 29 |
| 25 | 22 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 25 | 25 | 24 | 23 |
| 4 | 5 | 7 | மேகமூட்டம் (ஆக்டா) | 6 | 8 | 6 | 7 | 8 |
| 73-70 | 83-72 | 89-85 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90-70 | 90-70 | 90-70 | 90-70 | 90-70 |
| 4 | 7 | 3 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 12 | 14 | 14 | 16 | 16 |
| வட கிழக்கு | வட வட கிழக்கு | வடக்கு | காற்றின் திசை | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | வட வட கிழக்கு | வடக்கு |

### நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் அதிக மேகமூட்டத்துடன் காணப்படும். 03.12.2022 முதல் 07.12.2022 ஆகிய தினங்களில் குறைந்த அளவில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29 - 31 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23 - 26 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12-16 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும். |
| நெல் | நடவு வயல் | இலை சுருட்டுப்புழுக்களின் அறிகுறிகள் (புழுக்களால் சுருண்ட இலைகள், வெள்ளையான சுரண்டப்பட்ட இலைகள்) குறிப்பிட்ட அளவில் தென்பட்டால், கார்போசல்பான் 6 % குருனையை எக்டருக்கு 16.7 கிலோ தூவவும் அல்லது கார்டாப் கைட்ரோ குளோரைடு 50 % SP யை எக்டருக்கு 1 கிலோ வயலில் தூவவும். விவசாயிகள் பிவேரியா பேசியானா வை தமிழ் நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறையில் வாங்கி பயன்படுத்தலாம். |
| | | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் ஆனைக்கொம்பன் ஈ தாக்கம் பரவலாக தென்படுகிறது. இதனால் பயிரின் குருத்துப் பகுதி வெங்காயத் தாள் போல் மாறி கதிர்கள் வெளிவராது. இதன் பரவலை தடுக்க குளோர்பைரிபாஸ் 20 EC 500 மில்லி / எக்டர் என்ற அளவில் பயன்படுத்தவும் அல்லது பிவேரியா பேசியானா 5 கிராம் என்ற அளவில் 1 லிட்டர் தண்ணீரில் பயன்படுத்தவும் |
| கால்நடைகள் | ஆடு மற்றும் மாடு | தற்போது இரவு நேர வெப்பநிலை குறைந்து காணப்படுவதால் நிமோனியா பாதிப்பு ஏற்படட வாய்ப்புள்ளது எனவே ஆடு, மாடு குறிப்பாக இளம் கன்றுகளை திறந்த வெளியில் விடக்கூடாது. இரவு நேரங்களில் கொட்டகைகளில் வெப்பமூட்டிகளை பயன்படுத்தவும். |

## குறுஞ்செய்தி

மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும்.

**இயக்குநர்**